**மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகம் - 2021**

---

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழானஎனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயலகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயலகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு செயலகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் செயலகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- செயலகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- செயலகம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- செயலகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- செயலகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது

குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 16(2) ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் செயலகத்தின் செயலாற்றல் அறிக்கை தயாரித்து நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாற்றல் அறிக்கையில் செயலகத்தின் செயலாற்றல் காண்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தனியாக செயலாற்றல் அறிக்கையொன்றை தயாரித்து நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயலாற்றல் அறிக்கை தயாரித்து நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ii) | 40(1) ஆம் பிரிவு | உள்ளக கணக்காய்வை மேற்கொள்ளல் மற்றும் அந்த நிறுவனத்தின் நிர்வாக சபையினால் உரிய பிரகாரம் நியமிக்கப்படுகின்ற தமது உள்ளக கணக்காய்வாளர் | தேசிய செயலகம் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஒரு பிரிவாக தற்போது செயற்படுகின்றமை | செயலகத்திற் காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமித்து உள்ளக கணக்காய்வு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒருவர் இருக்க வேண்டியிருந்த போதிலும் செயலகத்திற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமித்து உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | மற்றும் அதற்காக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய செலவிமொன்றை செய்ய வேண்டி ஏற்படுகின்றமை என்பதால் தனியான உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல் மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவை ஸ்தாபித்தல் அவசியமற்றதாக இருந்தது எனவும், தொடர்ந்தும் அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் மூலம் உள்ளக கணக்காய்வு நிறைவேற்றுதல் பொருத்தமானதாக இருந்தது எனவும் தேசிய சபை தீர்மானித்திருந்தது. | பிரிவொன்றை ஸ்தாபித்தல் வேண்டும். |
| (iii) | 40(2) ஆம் பிரிவு | உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படாத சந்தர்ப்பத்தின் போது இந்த சட்டம் அமுல்படும் திகதியிலிருந்து 02 வருட காலங்களை விஞ்சாத காலஎல்லையில் அந்த நியமனம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளக கணக்காய்வாளர் பதவி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்படாதிருந்த மையால் அவ்வாறு நியமனத்தை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | தனியாக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்காக கவனத்தில் கொள்ளக் கூடிய செலவினத்தை செய்வதற்கு ஏற்படுகின்றமையால் தனியாக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பது அவசியமற்றதாக இருந்தது எனவும் தொடர்ந்தும் அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் மூலம் உள்ளக கணக்காய்வை நிறைவேற்றுதல் பொருத்தமானதாக இருந்தது எனவும் தேசிய சபை தீர்மானித்திருந்தது. | செயலகத்தில் அங்கீகரிக்கப் பட்ட பதவியணியில் உள்ளக கணக்காய்வாளர் பதவியை அங்கீகரித்து ஆட்சேர்ப்பினை மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | 41 ஆம் பிரிவு | நிர்வாக சபையினால் தமக்கு உதவும் வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகத்தால் நிர்வாக சபைக்கு உதவி வழங்கும் வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த செயற்பாடுகள் வரிசை இராஜாங்க அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பணி நடவடிக்கைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. | தேசிய செயலகத்திற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல் மற்றும் தனியாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை நியமித்தல் அவசியமற்றது என தேசிய சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது எனினும் எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களில் தீர்மானித்து தேசிய சபைக் கூட்டங்களுக்கு அனுப்பி பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கும், தேவையான தீர்மானங்களை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | செயலகத்திற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1996 இன் 28 ஆம் இலக்க மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் 7(3) ஆம் பிரிவு | நிர்வாக சபையின் கீழ் உள்ள உறுப்பினர்கள் மாதத்திற்கு ஒரு தடவை கூடவேண்டியிருந்த போதிலும் 2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் போது முறையே கூட்ட தடவைகள் 2, 2 மற்றும் 4 வீதம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று நோய் நிலைமையை காரணமாக கொண்டு விதிக்கப்பட்ட சுகாதார வழிகாட்டியின் பிரகாரம் பொதுமக்கள் ஒன்று கூடல் வரையறுக்கப் பட்டமையால் மாற்றுத் திறனாளிகளுக்காக தேசிய சபைக் கூட்டங்களும் வரையறுத்த அளவில் நடாத்தப்பட்டிருந்தது. | சட்டத்தில் காண்பிக்கப் படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்வாக சபையின் கூட்டத் தடவைகளின் ஆகக்குறைந்த எண்ணிக்கையேனும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் | 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் | 2021 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட தொற்றுநோய் | காலாவதியான காசோலைகள் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 396(இ) | கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத பெறுமதி ரூபா 138,764 ஆன காலாவதியான 05 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைமையினால் காசோலைகள் காலவதியாவதற்கு முன்னர் ஓய்வுபெறச் செய்வதற்காக வங்கிக்கு சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. தற்போது அந்த காசோலைகளின் திகதி நீடித்தல் மற்றும் புதிய காசோலை வழங்கல் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 183,179 மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,266.192 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,449,371 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசாங்கத்தின் மானியம் மற்றும் சுபிரி வாசனா லொத்தர் வருமானம் ரூபா 10,800,524 இனாலும், உதவி செயற்திட்ட செலவினம் ரூபா 3,002,398 இனாலும் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 16/1743/711/030 என்ற அமைச்சரவை குறிப்பில் வழங்கப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளை நிர்மாணிப்பதற்காக நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு நிதியினை வழங்குவதற்காக தேசிய லொத்தர் சபை நடாத்துகின்ற ‘‘சுபிரி | ‘‘சுபிரி வாசனா சம்பத’’ லொத்தர் வருமானத்தில் 05 சதவீதமாக வீடமைப்பு நிதியத்திற்கு திறைசேரியிலிருந்து வழங்கப்படுகின்ற பணம் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டின் இறுதியின் போதும் உரிய மாதத்தின் பிரகாரம் விபரமொன்று திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் நிலுவைப் பணத்தை கணிப்பிட்டு நிலுவை வருமானம் கணக்கீடு | லொத்தர் வருமானத்தை உரியவாறு அறவிடுவதற்கும் சரியாக கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாசனா சம்பத'' லொத்தர் வருமானத்தில் 05 சதவீதத் தொகையை அறவிட வேண்டியிருந்தது. அந்த வருமானத்தை சரியாக மதிப்பீடு செய்து மற்றும் கணிப்பிடுதலை மேற்கொண்டு உள்ளபடியான வருமானம், அறவிடுவதற்கு மற்றும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக பொதுத் திறைசேரியிலிருந்து வழங்குவதற்கு இணங்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட பணத்தை அடிப்படையாகக் கொண்டு ஆண்டின் வருமானம் மற்றும் பெறவேண்டிய நிலுவை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செய்யப்படுகின்றது. பொதுத் திறைசேரியிலிருந்து வழங்கப்பட்ட மற்றும் வழங்குவதற்கு இணங்கிய தொகை அந்த ஆண்டின் ''சுபிரி வாசனா சம்பத'' லொத்தர் வருமானத்தில் 05 சதவீத தொகையாக இருந்தமையை நம்பிக்கை கொள்ளாதிருப்பதற்கு போதியளவான விடயமாக இல்லாதிருந்தமையாலும், திறைசேரி மற்றும் லொத்தர் சபையின் நடவடிக்கைகள் கணக்காய்வின் போது பரீட்சிக்கப்பட்டிருந்த மையாலும் திறைசேரியினால் வழங்கப்படுகின்ற தகவல்கள் கணக்குகள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்படுகின்றது. | |
| (ஆ) | மாற்றுத்திறனாளிகளுக்கு சம வாய்ப்புக்களை வழங்குதல், வலுவூட்டுதல், நலன்புரி மற்றும் சுகநலன் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தேசிய மட்டத்தில் வெளிப்படையாகவும் முறையாகவும் பிரதி நலன்களை சமத்துவத்துடன் வழங்குவதற்கு இலகுவான முறையில் அமுல்படுத்துவதற்காக மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை மற்றும் மாவட்ட ரீதியிலான பரவல், வயது கட்டமைப்பு, ஊனமுற்ற நிலை, பொருளாதார நிலையை இனங்காணல் மற்றும் குறித்துரைத்த, சரியான மற்றும் ஆக்கபூர்வமான தீர்மானங்களை எடுப்பதற்காக ஊனமுற்ற மக்களின் தகவல்களை | புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் சமுர்த்தி திணைக்களத்தின் கணனிமயப்படுத்தப்பட்ட அவசர பதிலளிக்கும் பரிவின் மூலம் (ERC) ஊனமுற்ற நபர்களின் வாழ்வாதாரம் மற்றும் சிறுநீரக நோயாளிகள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றது. ஊனமுற்ற மக்கள் தொடர்பான தரவுகளை சேகரித்தல் தொகைமதிப்பு, புள்ளிவிபர திணைக்களத்தின் மூலம் 2023 இன் தொகைமதிப்பின் போது மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | ஊனமுற்ற மக்களின் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமை யொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கிய தரவு முறைமையொன்றை தயாரிப்பதற்கு போதியளவாகவும் செயற்திறனாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | நிகழ்ச்சித் திட்டம் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை மேம்படுத்துதல், இணை அபிவிருத்தி, பாதுகாப்பு போன்ற பணிப்பொறுப்புக்களை ஆக்கபூர்வமாக நிறைவேற்றியிருந்ததா என்பது தொடர்பான மதிப்பீடு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை முறையாக திட்டமிட்டு அமுல்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை | மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை மேம்படுத்துதல், அபிவிருத்தியை பாதுகாப்பதற்காக செயலகத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டம் மற்றும் செயற்திட்டம் தொடர்பான மதிப்பீடு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் உரிய பிரதேச செயலகங்களுக்கு நியமிக்கப்பட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் / அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமூக சேவை) இனால் மேற்கொள்ளப்படுகின்றது. செயலகத்தின் உத்தியோகத்தர்களினாலும் களப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. | நிகழ்ச்சித் திட்டம் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் தொடர்பான மதிப்பீடு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் போதியளவான பிரகாரம் நிறைவேற்றுதல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1996 இன் 28 ஆம் இலக்க மாற்றுத்திறனாளிகளின் உரிமையினை பாதுகாக்கும் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை மேம்படுத்துதல், இணை அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பை கண்காணித்துக் கொள்வதற்காக சட்டத்தில் காண்பிக்கப்படுகின்ற பணிகளை நிறைவேற்றுவதற்கு தேசிய சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| (அ) | மாற்றுத்திறனாளிகளின் நலன்களை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் இணை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக தொடர்ச்சியாக ஆலோசனை வழங்குதல் | புதிய சட்டம், சைகை மொழி சட்டத்தின் வரைவு செயற்பாடுகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. நுழைவு வசதிகளை வழங்கும் வர்த்தமானி தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | ஊனமுற்ற மக்களின் நலன்களுக்காக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாற்றுத்திறனாளிகள் தொடர்பாக உரிய சர்வதேச வெளிப்படுத்தல்கள் மற்றும் அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டமை மற்றும் பின்பற்றப்படுகின்றமையைக் கண்காணித்தல் | சர்வதேச சாசனங்களுக்கு இணங்க மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. | சர்வதேச சாசனங்களுக்கு இணங்க அரசாங்கம் செயற்படுவதை மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| (இ) | ஊனமுற்றமைக்கான பிரதான காரணம் என்ன என கண்டறிதல் மற்றும் அவற்றைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேம்படுத்தல். | இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின்னர் கடினமான மனநிலையிலுள்ள பிள்ளைகளை சமூகமயப்படுத்தும் வேலைத் திட்டத்தை தயாரித்து பாடசாலைகளில் விசேட கல்விப் பிரிவை ஸ்தாபித்து அவர்களை சாதாரண நிலைமைக்கு கொண்டு வரும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | ஊனமுற்ற மைக்கான காரணம் மற்றும் அவற்றைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஊனமுற்ற நபர்களை புனர்வாழ்வளிப்பதற்காக எடுக்க வேண்டிய செயற்பாடுகளைத் தயாரித்து அவற்றை மேம்படுத்துதல். | ஊனமுற்ற நபர்களின் ஆரம்ப சிறுவர் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அதற்காக தேவையான நிலையத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதலாவது நிலையம் தற்போது அக்குரஸ்ஸ பிரதேசத்தில் உலக வங்கி உதவியின் அடிப்படையில் நிர்மாணிக்கப்படுகின்றது. | புனர்வாழ்வளித்தல் படிமுறைகளை தயாரித்து மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ஊனமுற்ற நபர்களுக்கான புனர்வாழ்வளிப்பு | உலக வங்கி நிதியுதவியின் கீழ் அக்குரஸ்ஸ | ஊனமுற்ற மக்களுக்காக |

| | | | |
|---|---|---|---|
| | நிலையங்களை ஸ்தாபித்து நடாத்திச் செல்லல். | பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற ஆரம்ப சிறுவர் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் நிர்மாணங்கள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளது. நிர்மாணம் முடிந்ததன் பின்னர் புனர்வாழ்வளிப்பு பணிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | புனர்வாழ்வளிப்பு நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | ஊனமுற்ற நபர்கள் தங்குவதற்கான வசதிகளை வழங்கி அவர்களை பாதுகாப்பதற்காக நிறுவனத்தை தாபித்து பேணிச் செல்லல் மற்றும் அவ்வாறான நபர்களுக்கு கல்வி மற்றும் தொழிற்பயிற்சிகளை வழங்குதல். | 600 பேர்களுக்கு பராமரிப்பினை வழங்கக் கூடிய பிரகாரம் ஆறு பராமரிப்பு நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. சமூக சேவைகள் நிறுவனம், விதாத நிலையம், தனியார் நிறுவனம் மற்றும் விசேட பாடசாலைகளுக்கு மாற்றுத்திறனாளிகள் அனுப்பப்பட்டு கல்வி மற்றும் தொழில்பயிற்சி வழங்கப்படுகின்றது. | ஊனமுற்ற மக்களை பராமரிக்கும் கல்விரீதியான மற்றும் தொழில்ரீதியான பயிற்சிகளை வழங்கும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | ஊனமுற்ற நபர்கள் செல்லக்கூடிய வகையில் பௌதீக சூழலை அமைக்கும் வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும், தொடர்பாடலில் பிரவேசிப்பதற்கும் ஊனமுற்ற நபர்களுக்கு பெறக்கூடிய முன்மொழிவுத் திட்டத்தை அமுல்படுத்துதல். | கட்டிடத்தை நிர்மாணிக்கும் போது உரித்தாக்கப்பட்ட குறிகாட்டிகளை உள்ளடக்கி நுழைவு வசதிகளை வழங்குதல் தொடர்பான வர்த்தமானி பத்திரத்தை பிரசுரிக்கும் நடவடிக்கைகள் மற்றும் ஊனமுற்ற மக்களுக்கு தகவல்களை அறிந்து கொள்வதற்கும், அவர்களின் மனக் கவலைகளை தெரிவிக்க அவசர அழைப்பு தொலைபேசி இலக்கமொன்றை தாபிப்பதற்குமான நடவடிக்கைகள் இறுதி கட்டத்தில் உள்ளது. | ஊனமுற்ற மக்கள் நிறுவனங்களுக்கு நுழைதல் மற்றும் தகவல் தொடர்பாடல் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1996 இன் 28 ஆம் இலக்க மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மிகைப்பணம் தேசிய சபையினால் குறித்துரைக்கப்படுகின்ற முறையில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் கடந்த 05 வருட காலத்தில் வழங்கப்பட்ட அரசாங்கத்தின் மானியங்களில் பயன்படுத்தப்படாத நிதியம் வங்கி நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்ட காசு மீதி முறையே ரூபா 7,694,935 தொகை, ரூபா 9,636,186 தொகை, ரூபா 9,998,552 தொகை, ரூபா 12,062,703 தொகை, ரூபா 8,282,337 மற்றும் ரூபா 5,170,082 ஆக இருந்தது. இந்த மிகை காசு மீதியை சேமிப்பு பத்திரங்களில் அல்லது ஏனைய முதலீட்டு வழிகளில் முதலீடு செய்து செயலகத்தின் நிதி நிலைமையினை விருத்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு துறைகளில் திறன்களை காண்பிக்கின்ற மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிப்பதற்காக பணப் பரிசு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையால் அதற்காக நிதியத்தில் காணப்படுகின்ற மீதியிலிருந்து செலவினங்களை செய்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. கட்டுநிதி கிடைப்பதில் தாமதம் ஏற்படும் போது செயல் நடவடிக்கைத் திட்டத்திற்குரிய பணிகளை தொடர்ச்சியாகவும் தாமதமின்றியும் நிறைவேற்றுவதற்காக தேவையான பணத்தை மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் தற்காலிகமாக வழங்குவதற்கும், மூலதனப் பொருட்களை அமைச்சிலிருந்து பெற்றுக் கொள்வதற்கும் முடியாதிருந்த சந்தர்ப்பங்களின் போது தேசிய சபையின் அங்கீகாரத்தைப் பெற்று தேவையான வழங்கல்களை மேற்கொள்வதற்கு நிதியத்தின் மீதியை பயன்படுத்துவதற்காக முன்னைய ஆண்டுகளில் பயன்படுத்திய நிதிய மீதியை பயன்படுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது. அதனால் 2021.12.31 இல் உள்ளவாறு ரூபா 5,170,082 ஆன நிதிய மீதி வெளி நிறுவனம் ஒன்றில் முதலீடு செய்து மீளப் பெறப்பட்டிருந்த போதும், தேசிய சபையின் | மிகைப் பணத்தை முதலீடு செய்து நிதிவலுவை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தீர்மானத்தின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |

**3.4 ஏனைய அமைப்புக்களின் வளங்களை பயன்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1996 இன் 28 ஆம் இலக்க மாற்றுதிறனாளிகளின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட நிறுவனமொன்றாக செயலகம் தாபிக்கப்பட்டிருக்கும் போது வரிசை இராஜாங்க அமைச்சு மற்றும் ஏனைய திணைக்கங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளக ரீதியில் நியமிக்கப்பட்டு அந்த ஊழியர்களுக்காக சம்பளம் மற்றும் படிகள் அந்த வெளி நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. செயலகத்தில் சேவையில் ஈடுபட்டு கடமையாற்றிய 24 உத்தியோகத்தர்களுக்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 12,283,323 மற்றும் ரூபா 13,989,629 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 26,272,952 சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே செயலகத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த ஒரு உத்தியோகத்தருக்காக சமூக சேவைகள் திணைக்களத்தினால் சம்பளமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 598,201 மற்றும் ரூபா 607,900 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 1,206,601 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | செயலகம் அமைச்சின் பிரிவொன்றாக செயற்படுத்தப்படுகின்ற மையால் அமைச்சினால் சம்பளம் செலுத்தப்படுகின்றது. தேசிய சபைக்குரிய கணக்காய்வு ஐயவினாக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் செயலகம் தொடர்ந்தும் அமைச்சின் பிரிவொன்றாக செயற்படுதல் தொடர்பாக எதிர்ப்பு எழுந்திருக்கவில்லை. | செயலகத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நிரந்தர பதவியணியினரை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 30 இல் உள்ளவாறு மாற்றுதிறனாளிகளுக்காக தேசிய செயலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 40 ஆக இருந்ததுடன் 2022 மே 30 ஆந் திகதி வரையில் வெற்றிடமாக காணப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், சைகை மொழிபெயர்ப்பாளர் மற்றும் பிரைய்லி ஆலோசனையாளர் போன்ற 14 பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சைகை மொழிபெயர்ப்பாளர் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கும் நடைமுறையில் சம்பள படிநிலையை திருத்துதல் தொடர்பாக தேவையான ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் கோரப்பட்டுள்ளது. தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் பிரைலி ஆலோசனையாளர் பதவிக்காக உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கு தேவையான ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரிக்கும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளது. | வெற்றிடமான பதவிகளுக்காக பதவியணியினரை சேர்த்துக்கொள்ளும் செயலாற்றலை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |